# ஒரு கதை சொல்லட்டுமா?



காலம் கடந்து போவதைப் பற்றிய பிரக்ஞையின்றி, உள்ளிருப்பு வற்றிப் போன எரிச்சலில் அமிலம் சுரக்கும் வயிறு. அடுத்தவன் பொருளை அபகரித்தே பழக்கப்பட்டுப் போனாலும் வாழ்க்கை முறை அதுவே யென்றான பிறகு வெளி நியாயங்களைப் பற்றிய அக்கறை கொண்டு வாழத் தலைப்பட அவசியமில்லை.

அடுத்த வேளை வந்து பசிக்கத் துவங்கி விட்டது. நேரம் யாருக்காகவும் காத்திருக்காது போகலாம். ஆனால், இந்தப் பசியாவது காத்திருந்து தொலைக்கலாம். அதுவும் எவருக்காகவும் காத்திருக்காமல் வந்து தொலைக்கிறது.

இன்றைய மோசடியை யாரிடம் துவங்குவது என்பதில்தான் அடிப்படை பிரச்சனை. இந்தத் திருட்டு, வாழ்க்கையில் முன்னிலைக்கு வந்து விடுவதற்காக இல்லையென்றாலும் இப்படித் திருடி வாழ்க்கையை நடத்த வேண்டிய சூழலுக்குத் தள்ளி விட்ட கடவுள் மீது கோபமாக வந்தது.

பசிக்காக நடத்தும் இந்தத் திருட்டை பெரிது பண்ணாமல் விடும் பெரிய மனசு எவருக்கு இருக்கிறது?

அடுத்தவனைப் பற்றி கவலைப்பட நான் யார்? இப்போது என்னுடைய ஒரே குறிக்கோள் பசிக்கு உணவு. பாய் கடையில் போய் பார்க்கலாம். ஆனால், அங்கே நாய்களும் மனிதர்களும் ஈக்களும் பேதமில்லாமல் நின்று கொண்டிருப்பார்கள். அடிதடி சண்டை போட்டு உணவைப் பெற்றுக் கொள்ள உடலில் முன்போல வலுவில்லை. வலுவற்ற எதிரியை நேர்கொள்வதுதான் புத்திசாலிக்கு அழகாக இருக்க முடியும்.

திருடுவதென்பது இப்போதெல்லாம் அத்தனை எளிதல்ல. நிறைய தடுப்பு முறைகள், பாதுகாப்பு ஏற்பாடுகளென்று இல்லாதவன் திருட்டை தடுப்பதற்கு ஏராளமான முன்னெச்சரிக்கை வைத்திருக்கிறார்கள்.

இப்படி அன்றாடப் போராட்டத்திற்கு நடுவில் தான் வாழ்க்கை என்பது அலுப்பு தரத்தான் செய்கிறது. என்ன செய்து தொலைய? பேசிக் கொண்டிருந்ததில் நேரமாகி விட்டது. எனது எதிராளியை அடையாளம் கண்டுகொண்டேன். சாப்பாட்டு நேரம் வந்து விட்டது.

இனிதான் காய்களை நான் சாமர்த்தியமாக நகர்த்தியாக வேண்டும். இந்தக் கடையை சில காலமாகவே கவனித்து வந்து கொண்டுதான் இருக்கிறேன். காலை நேரமானால் தொடங்கும் கடை 10 மணிக்கெல்லாம் கலைந்து போகும். 9 மணிக்கு ஆட்கள் நிறைய வருவார்கள். அப்போது கைவரிசையைக் காட்ட முடியாது. என்னைப் போல வயதாகி விட்டதால் 10 மணியாகும்போது அல்லது கடை முதலாளி தளர்ந்து போகும் போதுதான் நான் நினைப்பதை நிகழ்த்த முடியும்.

வயிறு பசித்துக் கொண்டிருந்தாலும், நான் கொக்காக இல்லாமல் போனாலும், கொக்கைப் போலக் காத்திருக்க முடிவு செய்தேன்.

மனிதர்கள் வந்து கொண்டிருந்தார்கள் - பல உடைகளில், பல அளவுகளில். சிலருக்குக் கடன் வேண்டுமாம். கடைக்காரி மறுத்து ஏதோ வேகமாகப் பேசிக் கொண்டிருந்தாள். கடன் தர மறுப்பவள் கடையிலிருந்து நான் அபகரிக்கப் போவதை எப்படி ஏற்றுக் கொள்வாள்? அவளே இந்த வயதான காலத்திலும் உள்ளதை வைத்து பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறாள். அவளிடம் போயா திருடுவது என்று மனச்சாட்சி கொஞ்சமே கொஞ்சம் உறுத்த பசி மனச்சாட்சியை முறைத்ததில் அது அடங்கிப் போனது.

**திருடுவதென்பது இப்போதெல்லாம் அத்தனை எளிதல்ல. நிறைய தடுப்பு முறைகள், பாதுகாப்பு ஏற்பாடுகளென்று இல்லாதவன் திருட்டை தடுப்பதற்கு ஏராளமான முன்னெச்சரிக்கைகள்**

வாக்குவாதத்திற்குப் பின் கடைக்கார மூதாட்டி கடன் கேட்டவனுக்கு ஏதோ கொடுத்தாள். அவனும் இதுவரை ஏதுமே நடக்காதது மாதிரி சாப்பிடத் துவங்கி விட்டான். பசியென்று வந்து விட்டால் எல்லாம் ஒன்றுதான் போலிருக்கிறது என்று சமாதானம் செய்து கொண்டேன். அவனுக்கு வசவு வலிக்காதது போல எனக்கும் கிடைக்கப் போகும் வசவுகள் வலிக்காது என்று தோன்றியது.

கொஞ்சமாக புழுக்கம் துவங்கியது. சாலையில் போக்குவரத்துத் துவங்கியதன் அறிகுறியாக புழுதி மேலெழுந்து வரத் துவங்கியது. பள்ளிக்கூட பிள்ளைகள் அணிவகுத்து இன்றைக்கு எந்த டீச்சர் அடிப்பார்களோ என்ற கவலையோடு புத்தகப் பையை சுமந்து கொண்டிருந்தார்கள். அவ்வப்போது பிளிறிக் கொண்டு ஓடின பேருந்துகள்.

எல்லாரும் அவரவர் வேலைகளில் தங்களை பொருத்திக் கொள்ளும் அவசரத்தில் இருக்க கடையில் கூட்டம் மெல்ல கலையத் துவங்கியது. சிலருக்குக் கூட்டம்தான் கொண்டாட்டம். எனக்குக் கூட்டம் கலைந்தால்தான் என் வேலையைச் செய்ய முடியும். என் காத்திருப்பு நீளத் துவங்கியது.

ஒருவகையாகக் கடையில் ஆட்கள் குறைந்து போனதும் கடையில் பரப்பி வைத்திருந்த பலகாரங்களை நோட்டம் விட்டேன்.

இப்போது அந்த மூதாட்டி எல்லாவற்றையும் அடுக்கி வைத்து விட்டு புறப்படும் ஆயத்தத்தில் இருந்தாள். இன்னும் ஓரிரு நிமிடங்களில் எல்லாவற்றையும் அடுக்கி எடுத்துக் கொண்டு கிளம்பி விடுவாள்.

அதற்குள்ளாக நான் செய்ய நினைப்பதைச் செய்து முடித்தாக வேண்டும். கடைக்காரி இப்போது இலைகளை அள்ளி எடுத்து பக்கத்திலிருக்கும் குப்பைத் தொட்டியில் வீசி எறிவாள்.

பக்கத்தில் போய் போடுமளவுக்கு அவளுக்குப் பொறுமையில்லை என்பதை இத்தனை நாள் அவதானிப்பில் அறிந்திருந்தேன் நான். அந்த சில நிமிடங்களில்தான் அவளது கவனம் சிதறும். அந்த நிமிடம்தான் தோதானது.

நினைத்தது போலவே கிழவி இலைகளை எடுத்து எறிவதற்காக நடக்க முனைந்த நேரத்தில் கிளையிலிருந்து உந்தி எழும்பி இறக்கை விரித்தேன்.

புவியீர்ப்பு விசையோடு சேர்ந்து கீழிறங்கி அந்தக் கூடையில் இருந்த வடையைக் குறி வைத்தவாறே பயணப்பட்டு அதனைக் கவ்விக் கொள்ளும்போதும், அதை திரும்பிப் பார்த்து கிழவி பதறி கல்லெடுத்து எறிய முற்படும் போதும் கவனம் சிதறாமல் பறந்து வந்தமர்ந்தேன் பக்கத்து மரத்தின் உயர்கிளையில். திருடி ஜெயித்த மகிழ்ச்சியை விட அதில் இருந்த ஆபத்து கலந்த பதற்றம் உற்சாகமாக இருந்தது.

ரொம்பவே பசிக்கிறது. கதை சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை. அப்புறம் ஏதாவது நரி வருவதற்குள்ளாக வடையைத் தின்றாக வேண்டும்.

*- ஆசிப் மீரான்*

IRO

Immigration – குடிவரவு

**கடந்த 11 ஆண்டுகளாக பிரித்தானியாவில் குடிவரவுத்துறையில் முன்னணி நிறுவனம்**

**உங்கள் சகல விதமான**

- குடிவரவு விண்ணப்பங்கள்
- மேன்முறையீடுகள் (Appeals)
- இலங்கை, இந்தியாவில் விசா மறுக்கப்பட்டவர்களுக்கான மேன்முறையீடுகள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்

**இது தவிர**

- Human Rights - Humanitarian Protection, 10 years - 14 years விண்ணப்பங்கள்,
- புதிய அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் (Fresh Application)

விபரங்கட்கு: **திரு குலேந்திரன்**
**திரு ராம்**
**திரு சூரியகுமாரன்**

Tel: **020 8682 4494**
Mob: **07976 759 725**
**07939 261 540**
**07810 848 017**

OISC

**1083 Garratt Lane, Tooting, London SW17 0LN**

(குடிவரவு ஆணையாளர் அலுவலகத்தினால் குடிவரவு ஆலோசனைகள் வழங்க Level 3 அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனம்.)

முன் அனுமதி பெற்று வரவும்
அலுவலக நேரம் 11.00 – 17:30
திங்கள் முதல் வெள்ளி